தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 123/ந/2019
நாள். 06.12.2021

திருமதி.S.மாரியம்மாள்,
கோவில்பட்டி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, சுப்ரமணியபுரம், 2வது தெரு, நெம்பர்.2-1 என்கின்ற முகவரியில் வசிக்கும் திருமதி.S.மாரியம்மாள் க/பெ. திரு.C.சேகர் என்பவரின் மனு இம்முறைமன்றத்தில் பெறப்பட்டு 123/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு எண்ணாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின் போது மனுதாரர் சார்பாக அவரது கணவர் திரு.C.சேகர் அவர்கள் அளித்த வாக்குமூலம், எதிர்மனுதாரர்களான கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள், கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் அளித்த அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, சுப்ரமணியபுரம், 2வது தெரு, நெம்பர்.2-1 என்கின்ற முகவரியில் வசிக்கும் திருமதி.S.மாரியம்மாள் அவர்கள் தன்னுடைய மனுவில் கீழ்க்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கோவில்பட்டி நகராட்சி அனுமதியுடன் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டி வருகிறேன். கோவில்பட்டி நகராட்சி நில அளவை ஆய்வாளர் குமார் என்பவர் என்னிடம் லஞ்சமாக ரூபாய் ஒரு லட்சம் கேட்டார். மேற்படி லஞ்சப்பணம் நகராட்சி ஆணையாளர் வரை பங்கு கொடுக்க வேண்டும் என்றும், கொடுத்தால் எதுவும் கண்டு கொள்ள மாட்டோம் என்றும் இல்லை என்றால் கஷ்டப்படுவாய் என்று மிரட்டினார். நான் முறைப்படி கட்டும் வீட்டிற்கு ஏன் லஞ்சம் கொடுக்க வேண்டும் என்று கூறி மறுத்து விட்டேன். அதன் காரணமாக நில அளவை ஆய்வாளர் நான் வேலைக்காக இறக்கி வைத்திருந்த மணல் ஜல்லி சிமெண்டு ஆகிவற்றை ரோட்டிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று நிர்பந்தம் செய்து அப்புறப்படுத்தி விட்டார்.

எனது இடத்தில் தண்ணீர் தொட்டிக்காக குழிதோண்டி இருந்தேன் மேற்படி தண்ணீர் தொட்டி தோண்டியுள்ள இடத்தில் பொது நடைபாதையின் ஓரம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக கூறி அதை மூட வேண்டும் என்று என்னை மிரட்டினார். நான் கோவில்பட்டி நகராட்சி நில அளவையர் மூலம் பணம் கட்டி இடத்தை அளக்க நடவடிக்கை எடுத்தேன். இரண்டு முறை நில அளவை மேற்கொள்ளப்பட்டது. முதலில் ஆக்கிரமிப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பின்பு சிறிது ஆக்கிரமிப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. நான் மாவட்ட நில அளவையர் மூலம் அளக்க ஏற்பாடு செய்தேன். அதிகாரிகள் உள்நோக்கோடு அவசரமாக நான் தோண்டியிருந்த குழியை மூடி விட்டார்கள். நான் நில அளவை ஆய்வாளர் குமார் என்பவரிடம், சுப்பிரமணியபுரத்தில் நடு ரோட்டை ஆக்கிரமிப்பு செய்து பலர் வீடு கட்டி உள்ளார்கள். ஆனால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் லஞ்சம் கொடுக்காத காரணத்தினால் உள்நோக்கோடு அவசர கதியில் குழியை மூடி விட்டீர்கள் என்றும் இதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கு புகார் அளிப்பேன் என்று தெரிவித்தேன். அதற்கு மற்றவர்கள் அனைவரும் நாங்கள் கேட்ட பணத்தை கொடுத்து உள்ளார்கள். அதனால் அவர்கள் பொது இடத்தில் கட்டிடம் கட்ட அனுமதித்துள்ளோம். நான் பெரும் லஞ்சப் பணம் அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் பங்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அதனால் யாரிடம் சென்று புகார் அளித்தாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிவித்தார். இதுபற்றி கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் புகார் அளித்தேன். அவரும் நில அளவை ஆய்வாளர் மற்றும் அலுவலர்களுக்கு ஆதரவாக பேசுகிறார் என மனுதாரர் கூறியுள்ளார்.

2. மேலும் மனுதாரர் திருமதி.S.மாரியம்மாள் கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் நகராட்சி அலுவலர்கள் கீழ்க்காணும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகளில் ஈடுபடுவதாக புகார் தெரிவித்துள்ளார்.

i) " கோவில்பட்டி டவுன் கதிரேசன் கோவில் மனை அடிவாரம், அண்ணா நகர் 2வது தெருவில் டாக்டர் வெங்கடேசன் அவர்கள் அவரது மனைவி லதா என்பவர் பெயரில் கட்டியுள்ள வீட்டிற்கு அருகில் பொது நடைபாதை உள்ளது. அதில் 2 மின் கம்பங்கள் இருந்தன. மேற்படி மின்கம்பங்களை அகற்றி பொது நடைபாதை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என டாக்டர் வெங்கடேஷ் அவர்களால் நகராட்சி ஆணையாளருக்கு ரூபாய்.30 லட்சம், நில அளவை அலுவலர் காஜா பாய் என்பவருக்கு பத்து லட்சம் மற்றும் ஆய்வாளர் சேகர் என்பவருக்கு ரூபாய் 10 லட்சம் லஞ்சமாக கொடுக்கப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையாளர் கோவில்பட்டி மின்வாரியத்திற்கு மேற்படி மின்கம்பங்களை அகற்ற வேண்டி கடிதம் அளித்துள்ளார். அதற்குரிய கட்டண தொகை திருமதி.லதா அவர்கள் பணத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மின்கம்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு அருகில் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. டாக்டர் லதா அவர்கள் அவரது வீட்டின் அருகில் உள்ள பொது நடைபாதையும் பின்புறம் உள்ள ஓடையை சேர்த்து சுமார் 15 சென்ட் உள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்து சுற்றி சுவர் எழுப்பி உள்ளார். மேற்படி டாக்டர் லதா அவர்களால் ஆக்கிரமிப்பு செய்துள்ள பொது நடைபாதை மற்றும் ஓடையின் மதிப்பு சுமார் ரூபாய். 2.5 கோடி ஆகும்".

ii) "மேலும் இலவச கழிப்பறை கட்டியதிலும், அம்மா இருசக்கர வாகனம் வழங்கியதிலும் பெரிய அளவில் ஊழல் நடைபெற்றுள்ளது. கழிப்பறை கட்டியது மற்றும்

iii) இரு சக்கர வாகனம் வழங்கியது குறித்து ஆவணங்களை ஆய்வு செய்து ஸ்தல விசாரணை மேற்கொண்டாலே மேற்படி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் தெரியவரும்".

iv) "மேலும் கோயில்பட்டி பசுவந்தனை ரோடு, காமராஜர் கல்யாண மண்டபம் அருகில் உள்ள பொது இடத்தில் சபி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு லஞ்சம் பெற்றுக்கொண்டு அனுமதி அளித்தது".

v) "கோவில்பட்டி பழைய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள வணிக வளாகங்களுக்கு உரிமையாளர்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு குடியிருப்பு கட்டிடம் என குறிப்பிட்டு குறைந்த வரி விதிப்பு மேற்கொண்டுள்ளது".

vi) "கோவில்பட்டி ரயில் நிலையம் எதிரில் உள்ள சூர்யா எலக்ட்ரிகல்ஸ் கடை உள்ள கட்டிடம் நீர் நிலை ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது அதற்கும் லஞ்சம் பெற்றுக்கொண்டு அனுமதி அளித்ததும் அது பற்றி புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது".

3. மேற்சொல்லப்பட்ட ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக உரிய ஆவணங்களை ஆய்வு செய்தும் ஸ்தல விசாரணை மேற்கொண்டும் கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர், நில அளவை ஆய்வாளர் குமார், சேகர், வரிவிதிப்பு அலுவலர் காஜாபாய் மற்றும் டாக்டர் லதா ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை முறையீட்டு மனுதாரர் திருமதி.S.மாரியம்மள் வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இம்முறைமன்ற **29.11.2019** நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திருமதி.S.மாரியம்மாள் மற்றும் எதிர்மனுதாரர் கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் ஆகியோர் **21.01.2020** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. அன்று நடந்த விசாரணைக்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையர் ஆஜராகவில்லை. **21.01.2020** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் மனுதாரர் திருமதி.S.மாரியம்மாள் சார்பாக அவரது கணவர் திரு.செ.சேகர்ஆஜராகி கீழ்க்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்தார்.

"**13.08.2019** நாளிட்ட புகார் மனு எனது மனைவி பெயரில் என்னால் தான் அனுப்பப்பட்டது. அவரது கணவர் என்ற முறையில் மனுவில் உள்ள அனைத்து விவரங்களும் தெரியும். எனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எனது இடத்தில் பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் வீடு கட்டி வருகிறேன். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மத்திய அரசு திட்டம் செயல்பட்டு வருகிறது. வீடு கட்டுவதற்கு கட்டுமான பொருட்கள் எனது நிலத்தில் கொண்டு இறக்கிய போது நகராட்சி நில அளவை ஆய்வாளர் குமார் என்னிடமும் எனது மனைவியிடமும் வீடு கட்டுவதற்கு நகராட்சியின் அனுமதி பெறப்பட்டதா என்று கேட்டார். நான் இது குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டுப்படுவதால் நகராட்சி அனுமதியும் சேர்ந்த எனக்கு அனுமதி கடிதம் வழங்கப்பட்டுள்ளது தனியாக என்று கூறினோம் இது இரண்டு ஆண்டுகள் முன்பு நடந்தது. தேதி எனக்கு தெரியவில்லை. இந்த பகுதியின் ஆய்வாளர் நான் தான், எனவே 1 லட்சம் ரூபாய் பணம் வேண்டும்

இல்லையென்றால் இடைஞ்சல் செய்வேன் என்று கூறினார். அப்பொழுது எனது நிலத்தில் எனது மனைவி மற்றும் கட்டிட வேலை செய்து கொண்டிருந்தவர்கள் இருந்தார்கள். இதுபோன்று என்னை தொந்தரவு செய்ததால் நகராட்சி ஆணையரிடமும் குடிசை மாற்று அலுவலரிடமும் முறையிடுவேன் என்று சொன்னேன். நிலஅளவை செய்வதற்காக இரண்டு முறை உரிய பணம் நகராட்சிக்கு செலுத்த முயற்சி செய்தேன். யாரிடம் முறையிட்டாலும் நான் தான் கள ஆய்வு செய்யவேன். கட்டிடம் கட்ட விட மாட்டேன் என்று வன்மம் கூறி சென்றார். நகராட்சி ஆணையரிடம் வாய்மொழியாக பேசினேன். 30.04.2019-ல் நகராட்சி ஆணையரிடம் மனு கொடுத்தேன். அதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. எனது இடத்தை சர்வே செய்ய சொன்னேன் எனது இடத்தை அளக்க வரவில்லை. நகராட்சிக்கு பணம் கட்டியும் இதுவரை யாரும் வந்து இடத்தை அளக்க வில்லை. கோவில்பட்டி டவுன் ஆர்த்தி கல்யாண மஹால் மேல்புரம், அண்ணாநகர், 2வது தெருவில் டாக்டர் வெங்கடேசன் என்பவருடைய மனைவி பெயரில் கட்டியுள்ள வீட்டிற்கு அருகில் பொது நடைபாதை உள்ளது. பின்னே நீர்நிலை ஓடை உள்ளது. அதில் இரண்டு மின்கம்பங்கள் இருந்தன. மேற்படி மின்கம்பங்களை அகற்றி பொது நடைபாதை ஆக்கிரமிப்பு செய்ய டாக்டர் வெங்கடேசன் அவர்களால் ஆணையாளருக்கு ரூ.30 லட்சமும், நிலஅளவையர் திரு. காஜாபாய் என்பவருக்கு ரூ.10 லட்சமும் மற்றும் ஆய்வாளர் திரு. சேகர் என்பவருக்கு ரூ.10 லட்சம் கொடுக்கப்பட்டது. நகராட்சி ஆணையாளர் மின் கம்பங்களை அகற்ற கடிதம் எழுதி உள்ளார். அதற்குரிய கட்டண தொகை டாக்டர் வெங்கடேசன் மனைவியிடம் பணம் பெறப்பட்டது. மேற்படி மின் கம்பங்கள் அங்கு இருந்து அகற்றப்பட்டு விட்டது. அவரது வீட்டிற்கு அருகில் உள்ள பொது நடைபாதையும் ஓடையும் சேர்ந்து சுமார் 15 சென்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து நான்கு பக்கமும் சுவர் எழுப்பியுள்ளார்கள். அதனுடைய மதிப்பு ரூ.2.5 கோடி ஆகும். மேலும் இலவச கழிப்பறை கட்டியதிலும், அம்மா இருச்சக்கர வாகனம் வழங்கியதிலும் பெரிய அளவில் ஊழல் நடைபெற்று உள்ளன. நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் நகல்கள் கேட்டால் பதில் தரவில்லை ஆகையால் என்னால் அதுகுறித்து ஆதாரங்கள் சமர்ப்பிக்க முடியவில்லை. கோவில்பட்டி காமராஜர் கல்யாண மண்டபம் அருகில் உள்ள பொது இடத்தில் சபி Traders என்ற நிறுவனம் நகராட்சிக்கு சொந்தமான பொது இடத்தில் கட்டியுள்ள கட்டித்திற்கு லஞ்சம் பெற்று கொண்டு கட்டிட மற்றும் வணிக அனுமதி அளிக்கப்பட்டது மற்றும் பழைய பேரூந்து நிலையத்தில் அருகில் வணிக வளாகங்களுக்கு குடியிருப்பு கட்டிடம் என குறிப்பிட்டு குறைந்த வரிவிதிப்பு செய்துள்ளதும் கோவில்பட்டி இரயில் நிலையம் எதிரில் Suriya Electrical கடை உள்ள இடம் நீர்நிலை ஓடையாகும். அதை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என்று என்னால் புகார் செய்தும் நடவடிக்கை எடுக்காமல் லஞ்சம் வாங்கி கொண்டு அனுமதி அளித்துள்ளார்கள். எனவே மேலே குறிப்பிட்டுள்ள என்னால் முன்பு சொன்ன குற்றச்சாட்டுகள் குறித்து அவர்கள் பெற்ற லஞ்சங்கள் குறித்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நேரில் கள விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னால் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த வரிவதிப்பு செய்துள்ள ஆதாரங்களை இத்துடன் சமர்ப்பித்துள்ளேன் காமராஜர் பெயரில் வரிவிதிப்பு செய்துள்ளது. திருமதி.தேவி என்பவர் பெயர் மாற்றம் செய்வதற்காக மனு செய்து ஒன்றரை ஆண்டு காலம் ஆகியும் செய்யவில்லை. பின்பு லஞ்சம் கொடுத்து பிறகு தான் பெயர் மாற்றம் செய்தார்கள். நான் ஏற்கனவே

கோவில்பட்டி நகராட்சியுள்ள ஆக்கிரமிப்பு உள்ள இடங்கள் தொடர்பாக மனு கொடுத்தேன் அதற்கும் இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை".

5. மனுதாரர் திருமதி.S.மாரியம்மாளின் கணவர் திரு.செ.சேகர் அவர்கள், மனுதாரர் திருமதி.S.மாரியம்மாள் அவர்களின் 30.01.2020 நாளிட்ட வாக்குமூலத்தையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்தார். அவ்வாக்குமூலத்தில் திருமதி.எஸ்.மாரியம்மாள் தான் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், 2-1, சுப்ரமணியபுரம் 2வது தெரு என்ற முகவரியில் வசிப்பதாகவும், மேலும் தான் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவள் என தெரிவித்துள்ளார். மேலும் அவருடைய வாக்குமூலத்தில் கூடுதலாக சில புகார்களை கோவில்பட்டி நகராட்சி அலுவலர்களின் மீது கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளார்.

கோவில்பட்டி நகராட்சி எல்லையில் உள்ள ஆஸ்பத்திரிகளில் லஞ்சம் பெற்றுக் கொண்டு கிளினிக் என்ற பெயரிலே குறைவாக வரிவசூல் செய்கின்றனர். கிளினிக் என்று அடையாளம் காட்டிய பல ஆஸ்பத்திரிகளில் 100க்கும் மேற்பட்ட படுக்கைகள் போட்டு உள்நோயாளிகளை அனுமதித்து மருத்துவம் பார்க்கப்படுகிறது. இதனால் நகராட்சி நிர்வாகத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு பல கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட ஊழியர்களே காரணமாய் உள்ளனர்.

மேலும், என்னாலும் என் கணவராலும் கோவில்பட்டி நகராட்சி ஊழியர்களின் ஊழல் குறித்தும், முறைகேடுகள் அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை உயர் அதிகாரிகளிடம் புகார் மனுவாகவும், பொதுமக்களிடம் துண்டு சீட்டுகளாகவும், பல அறவழிப் போராட்டங்களாலும் பொதுமக்களிடம் எடுத்துச் சென்றதால் கோபம் கொண்ட ஆணையாளர், நில அளவை அலுவலர் காஜபாய், ஆய்வாளர்கள் குமார் மற்றும் சேகர் ஆகியோரின் கூட்டுச்சதி செயலால் அந்த பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து உள்ள ரவுடிகள் மூலம் அளவீடு செய்யாதது என் வீட்டில் ஆக்கிரமிப்பு உள்ளது என புரளியை கிளப்பி என் வீட்டில் உள்ள தண்ணீர் தொட்டியை உடைத்து அதில் நான் கட்டிட வேலைக்கு பயன்படுத்தக் கூடிய மணல், செங்கல், ஜல்லிகளை போட்டு மூடி அதில் ஒரு கல்லை நட்டு சுடுகாட்டில் மாலை போடுவது போன்று மாலை போட்டு அங்குள்ள CCTV கேமராக்களையும் உடைத்து எடுத்துச் சென்று உள்ளனர். அந்த கேமரா மற்றும் பதிவு பெட்டகம் அனைத்தும் ஆய்வாளர் குமார் என்பவரின் வீட்டில் உள்ளது.

என வீட்டில் ஆக்கிரமிப்பு உள்ளதாக நகராட்சி நிர்வாகம் எந்த ஒரு அறிவிப்பும் எனக்கு முறைப்படி இதுநாள் வரை அனுப்பவில்லை. நேரில் கொடுக்கவும் இல்லை. நான் பணம் கட்டி அளவீடு செய்த மனுவிற்கு எந்த நடவடிக்கையும் இதுநாள் வரை எடுக்கப்படவில்லை. மாறாக ஆணையாளர் அச்சையா, அலுவலர் காஜாபாய், ஆய்வாளர்கள் குமார், சேகர் ஒன்றிணைந்து கூடிப்பேசி அந்தப் பகுதியில் ரோட்டை ஆக்கிரமிப்பு செய்த ரவுடிகள் அனைவரையும் அழைத்துப் பேசி குமார் மூலமாக மது வாங்கிக் கொடுத்து 17.07.2019 அன்று இரவு சுமார் 8.30 மணிக்கு தண்ணீர் தொட்டியை உடைத்து கல் நட்டு சுடுகாட்டில் மாலை போடுவது போன்று செய்துள்ளனர். இது அதிகார துஷ்பிரயோகம். சட்டத்திற்கு புறம்பானது. நீதிக்கும் நேர்மைக்கும் மாறானது.

லஞ்சம் கொடுக்காத காரணத்தினால் 2 ஆண்டுகளுக்கு முன்பு வன்மம் கூறியது போல நகராட்சி ஊழியரான ஆய்வாளர் குமார் என் வீட்டில் கட்டிய தண்ணீர் தொட்டி மற்றும் CCTV கேமிரா ஆகியவற்றை உடைத்து கட்டிட மூலப் பொருட்களை போட்டு மூடி எனக்கு சுமார் 20 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தி என்னை மிகுந்த மன உளைச்சலுக்கு தள்ளி உள்ளார். மேலும், நான் என் வீட்டிற்கு போக முடியாதவாறு கூலிப்படை வைத்து கங்கனம் கட்டி வருகிறார். இதனால் நான் கட்டிடப் பணி செய்ய முடியாமல் திணறி வருகிறேன். இது நீதிக்கு கிடைத்த தண்டனையாகவே கருதுகிறேன்.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் அவர்கள், எனது மனுவை கருணையோடு பரிசீலினை செய்து லஞ்சம் பெறுவதற்காகவே அதிகார துஷ்பிரயோகம் செய்து அரசு விதிகளை கடைபிடிக்காத ஊழல் பெருச்சாளிகளான ஆணையாளர் அச்சையா, அலுவலர் காஜாபாய், ஆய்வாளர் குமார், சேகர் ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுத்தும், அதிகார துஷ்பிரயோகம் செய்வதால் நிரந்தர பணிநீக்கம் செய்தும் உத்தரவு பிறப்பித்து நான் அரசு சட்ட திட்டங்களுக்குட்பட்டு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி கட்டிட பணி தொடர ஆவன செய்யும்படி மிகப் பணிவோடு எனது கணவரின் வாக்குமூலத்துடன் என் வாக்குமூலத்தையும் பரிசீலனை செய்து நீதி செய்யுமாறு இருகரம் வேண்டி பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6. இம்முறைமன்ற முறையீட்டு மனு நாள் 22.01.2020 அழைப்பாணை மூலம் 14.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு கோவில்பட்டி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. ஆனால் நிர்வாக காரணங்களினால் 14.02.2020 ல் நடக்கவிருந்த விசாரணை இரத்து செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து இம்முறைமன்ற முறையீட்டு மனு நாள்.11.08.2021 அழைப்பாணை மூலம் 22.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையர் ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. கோவில்பட்டி நகராட்சி ஆணையர் அவர்கள் தன் 21.09.2021 நாளிட்ட கடிதத்தில் "கோவில்பட்டி நகராட்சிப் பகுதிகளில் கொரோனா தடுப்பு தீவிர நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும் நிலையில் மேல்முறையீட்டு மனு விசாரணையில் கலந்து கொள்ள இயலாத நிலை உள்ளதால் நகராட்சியின் சார்பாக அவருக்கு பதிலாக நகரமைப்பு ஆய்வாளர் திரு.மா.குமார் கலந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் ஆஜராகி விளக்கம் அளிப்பதற்கு அனுமதி அளிக்குமாறு தெரிவித்துள்ளார்.

7. இம்முறைமன்றத்தில் 22.09.2021 அன்று நடந்த விசாரணையில் கோவில்பட்டி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு.மா.குமார் என்பவர் ஆஜராகி கீழ்க்காணுமாறு வாக்குமூலம் அளித்தார்.

கோவில்பட்டி நகராட்சியில் சுப்பிரமணியம் இரண்டாவது தெருவில் வசிக்கும் திருமதி.எஸ்.மாரியம்மாள் என்பவர் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டியுள்ளார். அவ்வீடு கட்டும் இடத்திற்கு முன் செப்டிக் டாங்க் கட்டுவதற்காக பள்ளம் தோண்டி மூடப்படாமல் இருந்ததால், அதனை மூடுமாறு நகராட்சியால் கேட்டுக்கொள்ளப்பட்டு பள்ளம் மூடப்பட்டது. இதனால், நான் கையூட்டு கேட்டதாக மேற்கண்ட மாரியம்மாள் இம்முறை மன்றத்தில் புகார் தெரிவித்துள்ளார். இப்புகார் தவறானதாகும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் டாக்டர் சுதா என்பவர் அவரது வீட்டில் அருகில் உள்ள 15 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாகவும் கோவில்பட்டி ரயில் நிலையம் எதிரில் சூர்யா எலக்ட்ரிகல்ஸ் ஓடையை ஆக்கிரமிப்பு செய்ததாகவும் உள்ள புகார்கள் குறித்தும், கோவில்பட்டி பசுவந்தனை ரோடு காமராஜர் கல்யாண மண்டபம் அருகில் சபி டிரேடர்ஸ் நிறுவனத்தின் மூலம் நீர்நிலை ஓடையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியது தொடர்பான விவரங்கள் எனக்கு சரிவர தெரியவில்லை. எனவே, மேற்கண்ட நேர்வு தொடர்பாக பேரூராட்சியில் ஆவணங்களை ஒப்பிட்டு, இது தொடர்பாக எனது விரிவான அறிக்கை மற்றும் புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தால் வழங்கப்படும் வேறொரு விசாரணை நாளில் ஆஜராகி நேரடியாக சமர்பிக்கிறேன் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

8. இம்முறைமன்றத்தில் 22.09.2021 அன்று நடந்த விசாரணைக்கு ஆஜரான திரு.குமார், நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் இந்நேர்வில் போதுமான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. மேலும் விசாரணையின் போது அவருடைய பதில் திருப்தி அளிக்க கூடிய வகையில் இல்லை. எனவே இந்நேர்வில் மீள விசாரணை நடத்த நிர்ணயிக்கப்பட்டு, கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 06.10.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. இம்முறைமன்ற நடுவத்தில் 06.10.2021 அன்று நடந்த விசாரணையில் கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் அகியோர் ஆஜராகினர்.

விசாரணைக்கு ஆஜரான கோவில்பட்டி நகராட்சி ஆணையர் கீழ்க்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

கோவில்பட்டி நகராட்சியில் சுப்பிரமணியம் 2வது தெருவில் வசிக்கும் எஸ்.மாரியம்மாள் என்பவர் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டியுள்ளார். அவ்வீட்டிற்கு இடது புறமுள்ள சாலையிலும் மற்றும் பள்ளிக்கு எதிர்புறம் உள்ள சாலையிலும் செப்டிக் டாங்க் அமைக்க பள்ளம் தோண்டியதால், அருகில் உள்ள பள்ளியைக் கருத்தில் கொண்டு அப்பள்ளத்தை நகராட்சியால் உடனே மூடப்பட்டுவிட்டது. இதனையொட்டி மனுதாரரால் இம்முறைமன்றத்தில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள டாக்டர் லதா என்பவரின் வீட்டின் அருகில் 15 செண்ட் இடம் ஆக்கிரமிப்பு, கோவில்பட்டி ரயில் நிலையம் எதிரில் சூர்யா எலக்ட்ரிகல்ஸ் நீர்நிலை ஓடை ஆக்கிரமிப்பு, சபி டிரேடிர்ஸ் நிறுவனத்தின் மூலம் பொது ஆக்கிரமிப்பு ஆகியவற்றை என்னால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அதேபோன்று மேற்கண்ட இடங்களையும் என்னால் அளவீடு செய்யப்பட்டது. இந்நிகழ்வு குறித்த எனது 06.10.2021 நாளிட்ட எனது விரிவான அறிக்கையினையே எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தில் பதிவு செய்திட வேண்டுகிறேன்.

மேலும், சபி டிரேடர்ஸ் கட்டட அனுமதி பெறவில்லை. ஆனால் அக்கட்டிடத்திற்கு வணிக வரி விதிக்கப்பட்டுள்ளது. கட்டட அனுமதி பெறமால் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடம் மற்றும் அதே போன்று அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கி lock and seal செய்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன்.

9. கோவில்பட்டி நகராட்சி ஆணையர் விசாரணையின்போது சமர்ப்பித்த உறுதிமொழி பிரமாண பத்திரத்தில் கீழ்க்காணும் விபரங்களை தெரிவித்துள்ளார்:

i) "கோவில்பட்டி நகராட்சி வார்டு எண்.36 சுப்பிரமணியபுரம் பள்ளிக்கூடத் தெருவில் உள்ள பாதையில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் மற்றும் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் விதமாக பொது பாதையினை திருமதி.S.மாரியம்மாள் என்பவர் பள்ளம் தோண்டி செப்டிக் டாங்க் அமைக்க முற்பட்டதால் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை பொதுநலன் கருதி தடுத்து நிறுத்துமாறு நகராட்சி ஆணையருக்கு பொதுமக்கள் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டது. புகார் மனு மீது உரிய புலத்தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிலஅளவை மற்றும் நிலஆவணங்கள் நகர சார் ஆய்வாளரிடம் கோரப்பட்டது. நகர சார் ஆய்வாளர் நில அளவை மற்றும் நில ஆவணங்கள், கோவில்பட்டி நகராட்சி புலத்தணிக்கை அறிக்கையில் கோவில்பட்டி நகரம் வார்டு'இ' பிளாக் எண்.9, நகர புல எண்.56-ல் 0440 சதுரமீட்டர் பரப்பளவில் உள்ள பள்ளிக்கூடத் தெருவில் இடத்தில் 1.8 மீட்டர் அகலம் X 4.8 மீட்டர் நீளம் அளவில் அருகில் உள்ள நில உடமைதாரர் திருமதி.S.மாரியம்மாள் என்பவர் பள்ளிக்கூடத்தெரு பாதையில் பள்ளம் தோண்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக 23.04.2019-ந் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கைகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டது. கோவில்பட்டி கிழக்கு காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் உதவியுடன் கோவில்பட்டி நகராட்சி வார்டு எண்.36 சுப்பிரமணியபுரம் பள்ளிக்கூடத்தெருவில் திருமதி.S.மாரியம்மாள் என்பவரால் நடைபாதையில் 1.8 மீ x 4.8மீ அளவிலான பள்ளம் தோண்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் மாணவ, மாணவியரின் பொதுநலன் கருதி மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து தோண்டிய பள்ளத்தை நகராட்சி ஆணையாளரின் உத்திரவின் பேரில் நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர்கள் மற்றும் நகராட்சிப் பணியாளர்களால் ஜேசிபி இயந்திரம் மூலம் மூடப்பட்டது.

ii) கோவில்பட்டி நகராட்சி சுப்பிரமணியபுரத்தில் ரோட்டை ஆக்கிரமித்து வீடுகட்டி இருக்கும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை தீர்ப்பாணையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி நகராட்சி எல்லைக்குள் உள்ள நகராட்சி சாலைகள் மற்றும் தெருக்களில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ள நபர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ன் பகுதி 9-ல் பிரிவு 182(1) ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டு ஆக்கிரமிப்பினை அகற்றுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகத்தால் அந்த இடத்திற்கு கட்டிட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை.

iii) கோவில்பட்டி நகராட்சி கதிரேசன் கோவில் மலை அடிவாரம் அறிஞர் அண்ணா நகர் முதல் தெருவில் திருமதி.டி.எஸ்.லதா க/பெ. ஸ்ரீவெங்கடேஷ்

என்பவருக்கு பாத்தியப்பட்ட மனைபிரிவு இடத்தில் வீடு கட்டும் போது தங்கள் கட்டுமான இடத்தின் உள்ளே தெரு விளக்கு மின்கம்பம் உள்ளதால் அதனை சிறிது தூரம் நகர்த்தி பொது பாதையில் மாற்றியமைப்பதற்கு மின்சார வாரியத்தில் விண்ணப்பம் அளித்துள்ள நிலையில் மின்கம்பத்தை மாற்றி அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் அனுமதி அளிக்குமாறு 03.04.2019-ந் தேதிய மனுவில் திருமதி.டி.எஸ்.லதா என்பவர் கோரியதை தொடர்ந்து மனுதாரரின் இடத்தில் அமைந்துள்ள மின்விளக்கு கம்பத்தினை மாற்றம் செய்யவும் மேற்படி கம்பத்தில் உள்ள தெரு விளக்கினை அருகில் உள்ள மின்கம்பத்திற்கு மாற்றம் செய்யவும் அதற்கான செலவு தொகையினை சம்பந்தப்பட்ட மனுதாரரிடம் பெற்றுக் கொள்ளுமாறும் உதவி மின் பொறியாளர், மேற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், கோவில்பட்டி அவர்களுக்கு இவ்வலுவலக 04.04.2019 ந் தேதிய கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மின் கம்பத்தை மாற்றியமைப்பதற்கான கட்டணம் திருமதி.டி.எஸ்.லதா செலுத்தியுள்ள நிலையில் மேற்படி தெருவிளக்கு மின்கம்பங்கள் மின்சார வாரியத்தால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதில் எவ்விதமான முறைகேடுகள் நடைபெறவில்லை.

iv) மேலும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருமதி.டி.எஸ்.லதா என்பவர் வீட்டின் அருகே பொது நடைபாதை மற்றும் ஓடை எனக்குறிப்பிடப்படும் இடங்களை நகரளவை ஆவணங்களின்படி புலத்தணிக்கை செய்யப்பட்டதில் கோவில்பட்டி நகரம் கதிரேசன்கோவில் ரோடு, வார்டு பி, பிளாக் 2 நகரளவை எண்.175-ல் மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணையின்படி நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டு சரஸ்வதியம்மாள் க/பெ. குருசாமிநாயக்கர் மற்றும் காலியிடம் என்ற பெயரில் உள்ளதை திரு.வெங்கடேஷ் மனைவி திருமதி.டி.எஸ்.லதா என்பவர் அனுபவம் செய்து வருகிறார். மேலும் முறையீட்டு மனுவில் குறிப்பிடும் இடத்தில் நகரளவை ஆவணங்களின்படி ஓடை ஏதும் அமையவில்லை மற்றும் திருமதி.டி.எஸ்.லதா என்பவர் பொது நடைபாதை மற்றும் ஓடையினை ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை என கோவில்பட்டி நகராட்சி நகர்சார் ஆய்வாளர் நிலஅளவை மற்றும் நில ஆவணங்கள் தனது 30.09.2021 ந் தேதிய புலத்தணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

v) மேலும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள இலவச கழிப்பறை கட்டும்பணிக்கு உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்தகாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடு ஏதும் இல்லை. அம்மா இருசக்கர வாகனத்திட்டத்தின் கீழ் பயனாளிகளிடமிருந்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நகராட்சி ஆணையாளரால் அனுப்பப்பட்ட பின்னர் மேற்படி விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட அளவிலான தேர்வுக்குழு பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு நகராட்சி ஆணையாளரால் உத்திரவு வழங்கப்பட்ட பின்னர் பயனாளிகளால் வாகனம் விற்பனை நிலையத்தில் வாகனம் வாங்கிய பின்னர் பயனாளிகளிடமிருந்து (உரிமம், ஆர்சி புத்தகம், வங்கி பாஸ்புக், காப்பீடு, ஆதார் அட்டை வாகனம் வாங்கிய ரொக்க செலுத்து சீட்டு) ஆகிய ஆவணங்கள் பெற்ற பின்னர் பயனாளிகளுக்கு மானியம் விடுவிக்ககோரும் படிவம் பெறப்பட்டு மீண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர்

அவர்களுக்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக மகளிர் திட்ட அலுவலகத்திலிருந்து கோவில்பட்டி நகராட்சிக்கு மின்அலை பரிவர்த்தனை மூலம் அனுப்பப்பட்டுள்ளதை சம்பந்தப்பட்ட பயனாளிகள் சேமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கிகளுக்கு மானியத்தொகை வரவு வைக்கும் பொருட்டு காசோலை மூலம் அனுப்பப்படுகிறது. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை.

vi) மேலும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பசுவந்தனைரோடு காமராஜர் கல்யாண மண்டபம் அருகில் மனைப்பிரிவு ஒதுக்கீடு பொது இடத்தில் நகராட்சியால் கட்டிட அனுமதி ஏதும் அளிக்கப்படவில்லை. இதில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை.

vii) கோவில்பட்டி பழைய பேருந்து நிலையம் அருகில் வணிக வளாக கட்டிடங்களுக்கு குடியிருப்பு கட்டிடம் என குறிப்பிட்டு குறைந்த வரி என குறிப்பிடும் இடம் 50 கடைகள் வணிக பயன்பாட்டில் உள்ளது என வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளன. இதில் முறைகேடு ஏதும் இல்லை.

viii) கோவில்பட்டி ரயில் நிலையம் எதிரில் உள்ள சூர்யா எலக்ட்ரிகல்ஸ் (தற்போது கிருஷ்ணா எலக்ட்ரிகல்ஸ்) கடை உள்ள கட்டிடம் நீர்நிலை ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என முறையீட்டு மனுதாரர் குறிப்பிடும் இடம் நகரளவை ஆவணங்களின்படி புலத்தணிக்கை செய்யப்பட்டத்தில் கோவில்பட்டி நகரம் மெயின்ரோடு வார்டு டி பிளாக் 16ல் நகரளவை 30ல் அமைந்துள்ள புறம்போக்கு சாக்கடையில் அருகாமையில் உள்ள நகரளவை எண்.31-ன் பட்டாதாரர்கள் திரு.தங்கராஜ் மற்றும் முத்துமாரியப்பன் (கிருஷ்ணா எலக்ட்ரிக்கல்ஸ்) ஆகியோர் 2.32 ச.மீ பரப்பளவில் தரையில் இருந்து 4 அடிக்கு மேல் படிகூண்டு (Stair Case) கட்டி ஆக்கிரமிப்பு செய்து உள்ளதாக கோவில்பட்டி நகராட்சி நகர சார் ஆய்வாளர் நில அளவை மற்றும் நில ஆவணங்கள் அறிக்கை சமர்ப்பித்ததை தொடர்ந்து மேற்படி நீர்நிலை புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோவில்பட்டி வட்டாட்சியர் அவர்களுக்கு இவ்வலுலக 30.09.2021-ந் தேதிய கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ix) இந்நேர்வுகளில் முறையீட்டு மனுதாரர் அவர்களால் நகராட்சி ஆணையர், நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் அலுவலர்கள் மீது தெரிவித்துள்ள தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு மாறான அடிப்படை ஆதாரமற்ற ஆவணங்கள் ஏதும் இல்லாத ஒன்றாகும் என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

10. இந்நேர்வில் மனுதாரரின் மனு, மனுதாரர் சார்பாக அவரது கணவர் அளித்த வாக்குமூலம் மனுதாரரின் 30.01.2020 நாளிட்ட வாக்குமூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் கோவில்பட்டி

நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தில் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டன.

11. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் திருமதி.எஸ்.மாரியம்மாள் அவர்கள் கோவில்பட்டி நகராட்சி வார்டு எண்.36, சுப்ரமணியபுரம் பள்ளிகூட தெருவில் நடைபாதையில் பள்ளம் தோண்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பொது நலன் கருதி மூடுவதற்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மேற்கொண்ட நடவடிக்கையில் எவ்வித அதிகார துஷ்பிரயோகமோ அல்லது விதிமுறை மீறல்களோ இல்லை என்பது தெளிவாகிறது.

12. மனுதாரர் திருமதி.S.மாரியம்மாள் அவர்கள் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளை எவ்வித ஆதார ஆவணங்களின்றி தெரிவித்துள்ளார்:-

i) கோவில்பட்டி டவுன், கதிரேசன் கோவில்மனை அடிவாரம், அண்ணாதெரு, 2வது தெருவில் டாக்டர் வெங்கடேசன் அவர்கள் அவரது மனைவி லதா பெயரில் உள்ள வீட்டிற்கு அருகில் உள்ள இரண்டு மின்கம்பங்களை அகற்றி பொது நடைபாதையை ஆக்ரமித்தது மற்றும் ஒடையை ஆக்ரமித்தது.

ii) இலவச கழிப்பறையில் ஊழல் நடைபெற்றது.

iii) அம்மா இருசக்கரவாகன வழங்கியதில் ஊழல்

iv) கோவில்பட்டி பழைய பேரூந்து நிலையம் அருகில் உள்ள வணிக வளாகங்களுக்கு லஞ்சம் பெற்று குடியிருப்பு கட்டிடம் என குறைந்த வரி விதிப்பு செய்தது.

13. முறையீட்டு மனுதாரரது புகார் மனு மற்றும் இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளுக்கு பின்னரே மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள அனுமதியற்ற கட்டிடம் மற்றும் நீர்நிலை புறம்போக்கில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்றுவது சம்பந்தமாக சட்டப்படியான நடவடிக்கைகள் நகராட்சியால் எடுக்கப்பட்டுள்ளது நன்கு புலனாகிறது. எனவே, மேற்காணும் குற்றச்சாட்டுகளின் மீதான ஆணையரின் அறிக்கையை ஏற்று மனுதாரரிடம் இக்குற்றச்சாட்டுகளை நிருபிக்க எவ்வித ஆதார ஆவணங்களும் இல்லை என கருதி இக்குற்றசாட்டுகளின் மேல் நடவடிக்கையை கைவிட இம்முறைமன்றம் முடிவு செய்தும் "கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரது மேற்படி அறிக்கை பதிவு செய்யப்படுவதுடன், சட்ட விதிகளின்படியான நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படவும் உறுதி செய்யபடவும் வேண்டுமென வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது".

14. முன்பக்கம் 7, பத்தி 8-ல் குறிப்பிடப்பட்டுள்ள சபி டிரேடர்ஸ் கடைக்கு விதிமீறல் விதிப்படி நடவடிக்கை எடுக்காமல் இருந்த களப்பணியாளர்களின் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். அதேபோன்று அப்பகுதியில் அமைந்துள்ள விதிமீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த சம்பந்தப்பட்ட

பணியாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இந்த விசாரணை ஏற்பட்டதால் தான் மேல் நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையர் இசைவு தெரிவித்துள்ளது வருந்தத்தக்கது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திருமதி.S.மாரியம்மாள்,
க/பெ. திரு.C.சேகர்,
2-1, சுப்ரமணியபுரம், 2வது தெரு,
கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
உதவி பதிவாளர்.

நகல். இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

30/12/21

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம்
சென்னை–600 032

30/12/21